



# வீட்டு வன்முறை என்றால் என்ன?

வீட்டு வன்முறை என்பது நெருங்கிய உறவிலுள்ள இருவருள் ஒருவர் மற்றவரை தனது துர்நடத்தையால் கட்டுப்படுத்தி அதிகாரம் செலுத்துதலைக் குறிக்கும். இது சகலவிதமான உடல்ரீதியான தாக்குதல், உளரீதியான வன்முறை, சமூக வன்முறை, பொருளாதார வன்முறை அல்லது மன ரீதியான வன்முறை என்பவற்றை உள்ளடக்கும். மேலும் இது உங்கள் பாதுகாப்புக்கு அச்சமேற்படுத்துகின்ற நடத்தைகளையும் உள்ளடக்கும்.

இது பின்வரும்விதமான விடயங்களையும் உள்ளடக்கும்

- உங்களைக் குத்துதல், அடித்தல், உதைத்தல், அறைதல், மூச்சுத்திணறடித்தல்
- உங்களை அச்சுறுத்துவதற்காக கத்தி போன்ற ஆயுதங்களை உபயோகித்தல்
- உங்களைக் கட்டாயப்படுத்தி பாலியல் உறவுக்குட்படுத்தல் (பாலியல் வல்லுறவு)
- உங்களை ஆபாசப் படங்களைப் பார்க்க நிர்ப்பந்தித்தல்
- உங்களை மற்றவர்களுடன் பாலியல் உறவுகொள்ளும்படி நிர்ப்பந்தித்தல்
- உங்களை அவமானப்படுத்தல், இழிவுபடுத்தல் அல்லது உங்களைத் திட்டுதல்.
- உங்களை முட்டாள், உடல் பருத்தவர், அல்லது அவலட்சணமானவர் எனக்கூறல்
- உங்களைக் கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தல்
- உங்களை உங்கள் நாட்டுக்குத் திருப்பியனுப்புவதாக அச்சுறுத்தல்
- உங்கள் பிள்ளைகளை அல்லது உங்கள் ஏனைய குடும்ப உறுப்பினர்களை அச்சுறுத்தல்
- உங்களுக்கு முக்கியத்துவம்வாய்ந்த பொருட்களை சேதப்படுத்தல்
- உங்களுக்கு பணப்பற்றாக்குறையை ஏற்படுத்தல்
- நீங்கள் தொழில் செய்வதை அல்லது உங்கள் நண்பர்கள், உறவினர்களைப் பார்ப்பதைத் தடுத்தல்
- உங்களை வீட்டுக்குள் அடைத்து வைத்தல்
- உங்களை விசுவாசமற்றவர் என்று குற்றம் சுமத்தல்
- அநியாயமான கோரிக்கைகளை முன்வைத்தல்

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக வேண்டி உங்கள் துணைவருடன் தங்கியிருக்கலாம், உங்களுக்கு உறவினர்களோ அல்லது நண்பர்களோ இல்லாமலிருக்கலாம், அல்லது நீங்கள் பிரச்சினைகள் ஏற்படுத்துவதாக எண்ணி வெட்கப்படலாம். வீட்டு வன்முறை உங்கள் குற்றமல்ல. அது எவ்விதத்திலும் உங்கள் தவறல்ல.

நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டவர் அல்ல - உங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவருடன் கதைத்து உதவி பெற முயற்சிக்கலாம். உங்களுக்கும், உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் செய்யக்கூடிய மிகச்சிறந்த விடயம் யாதெனில் உங்களுக்கு உதவக்கூடிய ஒருவரிடம் கதைத்து உதவி பெறுவதாகும்.

---

## வீட்டு வன்முறை தொலைபேசி இணைப்பை
## 1800 65 64 63ல் அழையுங்கள்

---

நீங்கள் எதிர்நோக்குகின்ற வீட்டு வன்முறைப் பிச்சினை பற்றி உங்களுக்கு கதைப்பதற்கு ஒருவர் தேவையாயின், வீட்டு வன்முறை தொலைபேசி இணைப்பை 1800 65 64 63ல் நீங்கள் அழைக்கலாம்.

வீட்டு வன்முறை இணைப்பானது நாடளாவிய ரீதியிலான, 24 மணி நேர, நெருக்கடி ஆலோசனை மற்றும் சிபாரிசு சேவை வழங்கும் இலவச தொலைபேசி சேவையாகும். வீட்டு வன்முறை இணைப்பு உங்களுக்கான உரைபெயர்ப்பாளர்களையும் ஏற்பாடு செய்ய முடியும். வீட்டு வன்முறை இணைப்புக்கு வருகின்ற சகல அழைப்புகளினதும் இரகசியம் பாதுகாக்கப்படும்.

வீட்டு வன்முறை இணைப்பிலுள்ள பயிற்றுவிக்கப்பட்ட பெண் ஆலோசகர்கள் உங்களுக்கு பின்வரும் விடயங்களில் உதவுவார்கள்.

- பாதுகாப்பான ஓரிடத்தைக் கண்டறிதல்
- உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் அவசரகால தங்குமிடத்தைக் கண்டறிதல்
- காவல் துறையுடன் தொடர்பு கொண்டு சட்டரீதியான உதவி பெறல்
- வைத்தியசாலைப் பராமரிப்பு மற்றும் குடும்ப நல ஆதரவு சேவைகளைப் பெறல்
- வன்முறைக் கைது ஆணை (AVO) ஒன்றைப் பெற்றுக்கொள்ளல்
- உங்கள் பிரதேசத்திலுள்ள ஆதரவு வழங்கக்கூடிய சேவையொன்றைக் கண்டறிதல்

பல வகைப்பட்ட வீட்டு வன்முறைகள் அவுஸ்திரேலியாவில் சட்டவிரோத குற்றங்களாகும். வீட்டு வன்முறை அங்கீகரிக்கப்பட முடியாத நடத்தையாகும். நீங்கள் அதனை சகித்துக்கொள்ள வேண்டியதில்லை. இவ்விடயத்தில் உங்களுக்கு உதவக்கூடிய பல சேவைகள் இருக்கின்றன.

**வீட்டு வன்முறை இணைப்பை 1800 65 64 63ல் அழையுங்கள். நீங்களோ, உங்கள் பிள்ளைகளோ உடனடி அபாயத்தில் இருப்பீர்களாயின் 000 ஐத் தொடர்பு கொண்டு உதவி பெறலாம்.**

இப்பிரசுரத்தைப் பின்வரும் மொழிகளில் சமூக சேவைகள் திணைக்களத்தின் (DoCS) இணையதளம் www.community.nsw .gov.au இல் பெற்றுக்கொள்ளலாம்.

அரபு • சீனமொழி • குரோஷியன் • தாரி • டின்கா • பாரசீகம் • பிஜியன் • கொரியன் • மசடோனியன் • ரஷ்யன • சமோவன் • சோமாலி • ஸ்பனிஷ் • தமிழ் • டொங்கன் • துருக்கி • வியட்னாமீஸ்

DoCS

NSW Department of Community Services

இப்பிரசுரத்திலுள்ள புகைப்படங்களில் இடம்பெற்றுள்ளவர்கள் உருமாதிரிகள் மட்டுமே

September 2006